தனியாகப் பரிசீலித்து அரசாங்கமே விதிவிலக்கு கொடுத்து உயர்நிலைப் பள்ளி உருவாக்கலாம் என்ற விதி அரசாங்கத்திலே இருக்கிறது, அதைப் பயன்படுத்தி அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : பேரவைத் தலைவரவர்களே, அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

காங்கேயத்திலுள்ள அரிசன நல தாசில்தார் அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

***வினா எண் 630.—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பெருந்துறை பவானி மற்றும் தாராபுரம் வட்டங்களுக்கான அரிசன தாசில்தார் அலுவலகம் காங்கேயத்தில் உள்ளதை அரிசன மக்களின் நலன் கருதி பெருந்துறைக்கு மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இல்லை.

[முற்பகல் 10-20]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலிருந்து பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின் வேலை அதிகமாயிருக்கிறது என்று இந்த அரிசன நலத்துறை அலுவலகம் மாவட்டத்தில் ஒரு ஓரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அரிசன நல மக்களின் நலன் கருதி, இது மையமாக இருக்கின்ற பெருந்துறைக்கு மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆறு வட்டங்கள் உள்ளன. அங்கே இருக்கின்ற மூன்று தனி வட்டாட்சியர்கள், ஒவ்வொருவருக்கும் இரண்டு இடங்கள் என்ற விகிதத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டு, பெருந்துறையையும் தாராபுரத்தையும் ஒரு வட்டாட்சியர் கவனித்து வருகின்றார். அந்த வட்டாட்சியருடைய அலுவலகம் காங்கேயத்தில் இயங்கி வருகிறது. பெருந்துறைக்கும், தாராபுரத்திற்கும் இடையே இருக்கின்ற தூரம் சுமார் 70 கிலோ மீட்டர். ஆனால் தற்போதுள்ள இந்தக் காங்கேயம் பகுதி, பெருந்துறைக்கும் தாராபுரத்திற்கும் மத்தியில் 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

ஆகவே, இந்த இடத்திலே அமைந்திருக்கின்ற இந்த அலுவலகத்தினால் இரண்டு வட்டங்களிலேயும இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு மிகவும் வசதியாக இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று பெருந்துறைக்கு மாற்றினோம் என்று சொன்னால் தாராபுரத்திலே இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் ஏறத்தாழ 70 கிலோ மீட்டர் பயணம் செய்து அவர்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டியிருக்கும் என்ற காரணத்தினால் இதைப் பரிசீலப்பதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாற்றாததற்கு முன் 12 மைல் சென்று ஈரோடு அரிசன நலத் துறை தாசில்தார் அலுவலகத்தில் வேலைபார்க்க வேண்டியிருந்தது. மாற்றப்பட்ட பின் நிலைமை என்னவென்றால் 20 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பெருந்துறை ஒன்றியத்தையாவது ஈரோட்டுடன் இணைக்கின்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதை மாற்றியது மத்தியில் இருப்பதற்காகவும், அவர்களுடைய சௌகரியத்திற்காகவும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய சௌகரியத்திற்காக வேண்டி ஒரு ஜீப் வசதி கொடுத்தால்தான் நல்ல முறையில் செய்ய முடியும். அங்கே ஜீப் வசதியும் கொடுப்பதில்லை; யூனியன் என்று சொன்னால் அவர்களும் கொடுப்பதில்லை; வெல் பேர் ஆபீஸ் என்றால் ஜில்லாவிற்கு ஒரு ஜீப்தான் இருக்கிறது. அதனால் அவர்களால் சரிவர வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தமாக அதிகாரிகளை அதிகரிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு வாகன வசதிகளையாவது செய்து தரவேண்டுமென்ற எண்ணம் எதிர்காலத்திலாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன வசதி செய்து தருவதற்கு நிதி வசதி இல்லை. ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அதிகப்படுத்துவதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

கரூர் அரசினர் மாணவியர் விடுதி.

*வினா எண் 631—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :